09.02.2026

O.S.N0.284/2021

D.W.3.திரு.ஷேக்முகமது

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-

2ம் தபசில் சொத்தை எனது தகப்பனார் தான் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 2ம் தபசில் சொத்தினை எனது பெயரிலும், 2ம் பிரதிவாதி பெயரிலும், 6ம் பிரதிவாதிபெயரிலும் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. எனது பெயரில் கிரையம்பெற்றாலும் அது கூட்டுக்குடும்ப சொத்தாக இருந்தது என்றால் அதை எனது தகப்பனார் கிரையம் பெறவில்லை. அவ்வாறு கிரையம் பெறும்போது எனது தகப்பனார் தான் கிரையத்தொகையை செலுத்தினார் என்றால் சரியல்ல. கிரையப்பத்திரத்தில் எனது தாயார் பணம் கொடுத்தாக இருந்தாலும், எனது தகப்பனார் தான் பணம் கொடுத்தார் என்றால் எனது தாயார் பால் வியாபாரம் செய்தார். பணம் கொடுப்பதற்கு எனது தாயாருக்கு அப்போது வருமானம் இல்லை என்றால் சரியல்ல. எனது தாயார் பால்வியாபாரம், மற்றும் தையல் தைக்கும் தொழிலும் செய்து வந்தார் .2ம் தபசில் சொத்தினை பொறுத்து எனது பெயருக்கு கூட்டுப்பட்டா ஏற்பட்டு நாங்கள் தீர்வை ரசீது ஏற்படுத்தினோம் என்றும் அது கூட்டுக்குடும்ப சொத்தா என்றால் இல்லை. எனது தகப்பனார் வருமான உச்சவரம்பு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக மைனராகிய எங்கள் பெயரில் சொத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. மற்றப்படி 2ம் தபசில் சொத்தை எனக்குகிரையம் கொடுக்கவேண்டும் என்பதற்காக கிரையம்

பெறவில்லை என்றால் நாங்கள் மீண்டும் எனது அம்மா பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தோம். ஆனால் மீண்டும் எங்களது தாயார் செட்டில்மெண்ட் மூலம் எழுதிக்கொடுத்துவிட்டார். எஸ்.எஸ்.காஜாமுகைதீன் அவரது காலத்தில் அவரது சொத்தாகவே பராமரித்து வந்தார்கள் என்று சொன்னால் அந்த சமயத்தில் நாங்கள் இளவராக இருந்ததால் வீட்டிற்கு பெரியவர் பார்த்துக்கொண்டார். அவர் இறந்த பிறகும் 2ம் தபசில் சொத்து கூட்டுக்குடும்ப சொத்தாக அனுபவம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பெண்மக்களும், 2 முதல் 6 பிரதிவாதிகளும் 2ம் தபசில் சொத்தில் விவசாய வேலைகளை கவனித்து வந்தார்கள் என்றால் 2ம் பிரதிவாதி தான் செய்து வந்தார். நன்நம்பிக்கையின் அடிப்படையில் தான் 2ம் தபசில் சொத்தில் பெண் மக்கள், அவரது சகோதரர்கள் விவசாய வேலைகள் கவனித்து அனுமதித்தார்கள் என்றால் சரியல்ல.

வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before me in open court and read over to the witness and acknowledge by him to the correct

I Additional District Judge,

Tirunelveli.